மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :

(அ) 1977—78-ல் (1—4—77 முதல் 31—3—78 வரை) தென்னாற்காடு மாவட்டம், திருக்கோவிலூர் மேலும் விழுப்புரம் வட்டங்களில் வீட்டு மனைப் பட்டா கோரி வந்துள்ள விண்ணப்பங் களின் எண்ணிக்கை:—

விழுப்புரம்	376
திருக்கோவிலூர்	35

(ஆ) வீட்டுமனை பட்டா வழங்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை—

விழுப்புரம்	234
திருக்கோவிலூர்	30

(இ) தள்ளுபடி செய்யப்பட்டமனுக்களின் எண்ணிக்கை—

விழுப்புரம்	116
திருக்கோவிலூர்	5

திரு. வி. கொ. சின்னசாமி : தலைவர் அவர்களே, வீட்டு மனை பட்டா கொடுப்பதில், மொத்தமாக தமிழகத்திலே (மணியடிக்கப் பட்டது).

வெள்ளாற்றில் தூர் எடுத்தல்.

* வினா எண் 107.— திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், பரங்கிப் பேட்டை வெள்ளாற்று முகத்துவாரம் அன்னங்கோயில் என்ற இடத்தில் மீன்பிடி படகு உள்ளே வர முடியாமல் மண்மேடிட்டுவிடுவதை தடுத்து ஆழப் படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் அரசுக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இல்லை.

1973 செப்டம்பர் 9]

திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பரங்கிப் பேட்டையைச் சேர்ந்த அன்னங்கோயில் என்ற இடத்தில் முகத்துவாரத்தில் வருஷத்தில் 4, 5 மாதங்கள் பெரிய போட்டுகள், விசைப்படகுகள் மீன் பிடித்துக் கொண்டு உள்ளே வர முடியாமல் மணல்மேடிட்டு அது தூர்ந்து போய்விடுவதால், அங்கேயுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக வளர்ச்சி மன்றத்தின் மூலமாக தீர்மானம் செய்து அது அரசுக்கு அனுப்பப்பட்டது தவிர, அங்கே 10,000-க்கு மேலான மீன்பிடித் தொழிலாளர்கள் அந்தப் பகுதியிலே வசிக்கின்றார்கள். எனவே அவர்களுக்கு அனுகூலமாக இதைச் சீர் செய்ய, அரசு ஏற்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—30)

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தமிழக அரசால் இதற்கு முன்னல் துறைமுக ஆய்வுக்குழு ஒன்று தமிழகத்தில் இருக்கிற கடலோரக் கிராமங்களில் ஆய்வு செய்யும்படி நியமிக்கப்பட்டது. அந்தக் குழு ஆய்வு செய்து 15 கடற்கரை இடங்களில் மீன்பிடிக் கலங்கள் தங்க தகுதியான இடங்கள் என்று சிபாரிசு செய்தது. அதிலே பரங்கிப்பேட்டையும் ஒன்று. பின்னல் தமிழக அரசு அதிலே கலங்கள் தங்குவதற்கான துறைமுகங்களைக் கட்டுவதற்கான ஆராய்ச்சிகளைச் செய்த நேரத்தில் அதை உருவாக்க பல கோடி ரூபாய் செலவாகும் என்ற முடிவுக்கு வந்த காரணத்தால் அவ்வளவு தொகையைச் செலவழிக்க முடியாது என்ற நிலைமையில் கைவிடப்பட்டது.

திரு. துரை கலியமூர்த்தி: மாவட்ட ஆட்சித் தலைவர், நடைபெற்ற வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் மூன்று லட்சம் ரூபாய் செலவில் செய்யலாம் என்று அறிவித்தார்கள். அது அரசின் கவனத்திற்கு வந்ததா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: ஆட்சிமன்றக் குழுவின் முடிவு எதுவும் இதுவரை அரசுக்கு வந்து சேரவில்லை.

திரு. என். கிட்டப்பா: பரங்கிப் பேட்டைக்கு அருகில் உள்ள அன்னங்கோயில் என்ற இடத்தை மீன்பிடி துறைமுகமாக மாற்ற வேண்டுமென்றல், பலகோடி ரூபாய் செலவாகும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னர்கள். அந்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா? பரங்கிப்பேட்டையின் முக்கியத்துவம் கருதி அந்த முகத்துவாரத்தைச் சீர் செய்ய இனியேனும் அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : சரியாக எத்தனை கோடி ரூபாய் மதிப்பீடு இடப்பட்டது என்ற புள்ளி விவரங்கள் இல்லை. இருந்தாலும் நம்முடைய அரசு தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது.

மீனவர் கூட்டுறவுச் சம்மேளனங்கள்.

*வினு எண். 108.—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட மீனவ கூட்டுறவு சம்மேளனம் எந்தெந்த மாவட்டங்களில் உள்ளன ?

(ஆ) அவைகளுள் இயங்காமல் உள்ளவை எத்தனை?

(இ) அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) கீழ்க்கண்ட ஒன்பது மாவட்டங்களில் உள்ளன—

1. சென்னை,
2. செங்கற்பட்டு,
3. தென்ஆற்காடு,
4. தஞ்சாவூர்,
5. திருநெல்வேலி,
6. வட ஆற்காடு,
7. இராமநாதபுரம்,
8. மதுரை,
9. கன்னியாகுமரி.

(ஆ) ஒன்றுமில்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். கணேசன் : இந்த மீனவக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் மூலமாக எந்தெந்த வகையில் மீனவப் பெருங்குடி மக்கள் பயன் அடைகிறார்கள் ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இந்த மீனவச் சம்மேளனங்கள் மூலமாக மீனவர்களுக்கு வேண்டிய நைலான் வலைகள், அவர்களுடைய தொழில்களுக்குத் தேவையான மற்ற சில சிறிய பொருள்கள், வியாபாரம் செய்வதற்கான நிதி வசதி எல்லாம் செய்யப்பட்டு வருகிறது.